திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கேள்வி நேரம் முடிந்தவுடன் எல்லோரும் எழுந்து கேள்விகள் கேட்பதை பழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் நீங்கள் உறுப்பினரை ஒருமுறை அனுமதித்திருக்கலாம். ஆகவே இந்த மசோதாக்களைப் பிரேரேபித்த பிறகாவது அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதாக்களை அறிமுகம் செய்த பிறகு அவர்களை அனுமதிக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர் சினிமாவில் நடிக்க பதவி விலக இருப்பது குறித்து.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே நேற்று முன் தினம் நான் இந்த அவையில் ஒரு பிரச்சினையைக் கிளப்பினேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யப் போகிறார்களா, சினிமாத் துறைக்கு போகப் போகிறார்களா என்றெல்லாம் கேட்டேன். அதற்கு அவர்கள் வாயிலிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள், அவர்கள் இந்த அவைக்கு வரும்போது தகுந்த பதில் அளிப்பார்கள் என்று சொன்னீர்கள்.

முந்தாநாள் மாலையில் ஒரு பத்திரிகையில் செய்தி வந்தது. மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை எம். ஜி. ஆர். அவர்கள் பதவி விலகல் சம்பந்தமாக வந்திருக்கிறது. அவர்கள் உங்களையும் மீறியிருக்கிறார்களா- மீறப்பட்டது என்று சொல்ல மாட்டேன்-ஆனால் இந்த அவைக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS